# பெரியார் பல்கலைக்கழகம்
# PERIYAR UNIVERSITY
State University – NAAC 'A++' Grade – NIRF Rank 56, State Public University Rank 25
**SALEM – 636 011, TAMIL NADU**

**முனைவர் P. பிரகாஷ்**
**ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர்**


PU/R/R&D(P)/HE-2067A-K2/2024 நாள் 28.11.2024

அன்புடையீர்,

பொருள்: பெரியார் பல்கலைக்கழகம் - கூடுதல் தலைமைச் செயலாளர்(அரசு), உயர்கல்வித்துறை அவர்களின் கடிதம் பெறப்பட்டுள்ளமை - பல்கலைக்கழக துறைத்தலைவர்கள் மற்றும் இணைவுபெற்ற கல்லூரி முதல்வர்களுக்கு தகவல் தெரிவித்தல் - சார்பு.

பார்வை:
1. கூடுதல் தலைமைச் செயலாளர்(அரசு), தலைமைச் செயலகம், உயர்கல்வித்துறை(K2),சென்னை அவர்களின் கடித எண்:2067A/K2/2024-1, நாள் 17.11.2024.
2. இவ்வலுவலக குறிப்பாணை நாள் 25.11.2024.

-----

பார்வை(1)இல் காணும் கூடுதல் தலைமைச் செயலாளர்(அரசு), உயர்கல்வித்துறை அவர்களின் கடிதத்தில், பல்கலைக்கழகங்களில் உள்ள முனைவர் பட்ட நெறியாளர்கள் அவர்களது நெறியாளுகையின் கீழ் உள்ள மாணாக்கர்களை பல இன்னல்களுக்கு உள்ளாக்குவதாகவும் மற்றும் முறையற்று நடத்துவதாகவும் அறியப்பட்டுள்ளது என்றும், அவ்வாறான நிகழ்வுகள் இனிவரும் காலங்களில் நடக்காமல் இருப்பதற்காக சுற்றறிக்கை வாயிலாக இவ்விவரத்தை முனைவர் பட்ட நெறியாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அவ்வாறான நிகழ்வு ஏதேனும் நடந்தால், அதற்கு முன்னுரிமை அளித்து உடனடியாக அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பார்வை(2)இல் காணும் இவ்வலுவலக குறிப்பாணையின் படி பல்கலைக்கழக துறைத்தலைவர்கள் மற்றம் இணைவு பெற்ற கல்லூரி முதல்வர்கள் தங்கள் துறைகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள முனைவர் பட்ட நெறியாளர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு மேற்காணும் நிகழ்வுகள் இனிவரும் காலங்களில் நடக்காமல் இருக்க வேண்டும் என அறிவுறுத்துமாறும், அவ்வாறான நிகழ்வு ஏதேனும் நடந்தால் அதற்கு முன்னுரிமை அளித்து உடனடியாக அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

P. [signature] 2.12.24

**ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர்**

இணைப்பு : பார்வை(1)இல் கண்டுள்ள கடிதம்.

பெறுதல்

1. அனைத்து துறைத்தலைவர்கள், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.
2. இணைவு பெற்ற கல்லூரிகளின் முதல்வர்கள்.
3. இணைவு பெற்ற ஆராய்ச்சி ஆய்வு நிறுவன இயக்குநர்கள்.
4. இயக்குநர், பெரியார் பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், தருமபுரி.